<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 46/2021

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 1 |
| Name | : ஜெயவேலு (வயது –67 ) |
| Father's Name /W/o | : த/பெ அண்ணாமலை |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : தக்கோலம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 26.06.2025.

## <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தக்கோலத்தில் எங்கு வசித்து வருகிறேன் என்றால் கல்யாத்தம்மன் கோயில் தெருவில் வசித்து வருகிறேன். பிரதிவாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் என் பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள். கோமதி, பன்னீர் செல்வம் (1 ஆம் பிரதிவாதி) மற்றும் பஞ்சாட்சரம்(2 ஆம் பிரதிவாதி) அவர்களுக்கு என்ன உறவு என்றால் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளின் சகோதரரின் மனைவி ஆவார்.

2. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை எத்தனை பிரிவாக பிரித்துள்ளேன் என்றால் 2 பிரிவாக பிரித்துள்ளேன். தாவா சொத்தின் 1 ஆம் ஐட்டம் யாருக்கு சொந்தம் என்றால் என் தாயாருக்கு சொந்தம்.

3. என் தாயார் பெயர் என்னவென்றால் சந்திரா. என் தாயாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என்னை சேர்த்து 6 பேர் (ஆண் – 2 பெண் – 2). பெண்கள் இருவர் இறந்துவிட்டனர் ஆண் ஒருவர் இறந்துவிட்டார். நான் பிரமான பத்திரத்தில் தெரிவித்தது போல் என் தாயார் பெயரில் உள்ள பட்டா எண்.420 நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. என் தாயார் பெயரில் எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் தந்தையார் மற்றும் பிரதிவாதிகளின் தந்தையார் காலத்தில் இருந்து பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் தந்தை காலகட்டத்தில் எந்த பிரச்சினை இல்லை என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வா.சா.ஆ – 2 என் பெயரில் உள்ள பட்டா அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அசல்தான் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பட்டா வா.சா.ஆ – 2 தாவா சொத்து முதல் ஐட்டம் சொத்து குறித்தது என்றால் சரிதான்

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**